**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, THIRUMANGALAM**

O.S No.219/2017

<u>P.W. 1 – சாட்சி.பரமன், த.பெ.கருப்பணன்</u>

Solemnly affirmed and sworn by Thiru.S.Sadhu Siva Subramanian, Additional District Munsif on 30.06.2026 in accordance with the provisions of Act XX141.

<u>1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :

1. நான் குடியிருந்து வரும் வீட்டின் தென்வடல் நீள, அகலம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தென்வடலாக 22 – ½ அடியில் வீடு கட்டியிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக தெரியாது என்று உண்மையை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு அடுத்து வடக்கே என்ன உள்ளது என்றால் பாத்ரூம் கட்டியுள்ளேன். மேற்படி பாத்ரூமிற்கு வடக்கே காலியிடம் உள்ளது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு பாத்ரூமிற்கும் திருமால் காலியிடத்திற்கும் இடையே 2 அடி அகல காலியிடம் விட்டுள்ளேன் என்று எனது வழக்கிலும் மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் கட்டியுள்ள பாத்ரூமின் நீள அகலம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. நான் கட்டியுள்ள பாத்ரூமின் நீளம் 4 அடி, அகலம் 4 அடி இருக்கும் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வடக்கே என் பங்கின் மொத்தம் நீளம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீடு மற்றும் நான் கட்டியுள்ள பாத்ரூம் ஆகியவற்றை சேர்த்து 28– 1/2 அடி நீளம் நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் எனக்கு சரியாக தெரியாது. எனக்கும், என் அண்ணனின் பங்கும் சேர்த்து 52 அடி உள்ளது, 28 – ½ நீளம் நான் அனுபவித்து வருவதால் 2 – ½ அடி நீளம் அதிகமாக நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

3. என் பங்கு மற்றும் என் அண்ணன பங்கு  மேற்கு பகுதியில் உள்ளது என்றாலும் கிழக்கு பகுதியில் அங்கம்மாள் என்பவருக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி அங்கம்மாள் சொத்து சாந்தி என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு அரை பங்கு, என் அண்ணனுக்கு அரை பங்கு, மேற்படி சாந்தி என்பவருக்கு ஒரு பங்கு உள்ளது என்றால் சரிதான். இரு தரப்பிலும் பயன்படுத்துவதற்காக பொதுவான பாதை விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையில் வாதிகளும், பிரதிவாதிகளும் சேர்ந்து 2 அடி மற்றும் சாந்தி தரப்பில் 2 அடி சேர்த்து 4 அடி அகல பாதை உள்ளது என்றால் வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் 3 அடியும், சாந்தி தரப்பில் 1 – ½ பாதையும் சேர்த்து மொத்தம் 4 – ½ பாதை உள்ளது. பிரதிவாதி தரப்பில் 2 – 1/2 அடி அகல பாதைக்காக விட்டுக்கொடுத்துள்ளார்கள் என்றும் சாந்தி தரப்பில் 2 அடியும் சேர்த்து 4 – ½ அடி அகல பாதை கொடுத்துள்ளார்கள் என்றால்  சரியல்ல. தெற்கு பக்கத்தில் உள்ள சாலையில் இருந்து என் வீட்டிற்கு செல்வதற்கு 4 – ½ அடி அகல பாதை உள்ளது என்றால் 3 – ½ அடி தான் உள்ளது.

4. நான் தான் ஆக்கிரமிப்பு செய்து படி கட்டியுள்ளேன் என்றாலும் எனது பங்கிற்கு பாதைக்கு இடம் கொடுக்காமல் வீடு கட்டியுள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரத்தை மறைப்பதற்காக பிரதிவாதிகள் 1 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் பாதைக்காக ஒதுக்கிய இடத்தை தான் நான் பாதையாக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. சாந்தி வகையறா ஒதுக்கிய இடத்தை தான் நான் பாதையாக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல, நான் இடம் கொடுத்துள்ளேன். நான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதால் தான் பிரதிவாதி வீடு கட்டும் போது என்னுடைய வீட்டின் சுவரில் பொருதிக் கொண்டு சேர்த்து கட்டுவதற்கு நான் அனுமதி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதி தரைதளம் கட்டுவதற்கு அனுமதி அளித்துவிட்டு பிரதிவாதிகள் முதல் தளம் கட்டும் போது எனக்கு பாத்தியப்பட்ட சுவரில் பொருத கூடாது என பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீடு கட்டும் நான் தான் பிரச்சனை செய்தேன் என்றாலும் அவர்கள் மீது பொய்யாக திருமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தில் நான் 2 – ½ ஆக்கிரமித்து நான் வீடு கட்டியுள்ளேன் என்றாலும் வழக்கில் நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.